TNPSC GROUP-IV EXAM (MODEL QUESTIONS AND ANSWER)



# டி.என்.பி.எஸ்.சி. குரூப்-4 தேர்வு

மாதிரி வினா-விடை 83

தொகுப்பு: சாம் ராஜேஷ்வரன்

## பொதுத்தமிழ் : தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும் - 11

346. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க
a. திராவிட – திரவிட – திரமிள – தமிழ்
b. திராவிட – திரமிள – திரவிட – தமிழ்
c. தமிழ் – திரமிள – திரவிட – திராவிட
d. தமிழ் – திராவிட – திரமிள – திரவிட
e. விடை தெரியவில்லை

347. சரியான விடையை எழுதுக.
நடுதிராவிட மொழிகள் யாவை?
a. கதபா, பெங்கோ, கோபா
b. தோடா, கோத்தா, கொரகா
c. மால்தோ, குரூக், பிராகுய்
d. கோத்தா, கூவி, மால்தோ
e. விடை தெரியவில்லை

348. ‘இந்தியாவின் தேசியப் பங்கு வீதம்’ – இந்நூலுக்குரிய டாக்டர் அம்பேத்கர் மறைந்த தினம்
a. 1926 – டிசம்பர் 6 b. 1936 – டிசம்பர் 6
c. 1946 – டிசம்பர் 6 d. 1956 – டிசம்பர் 6
e. விடை தெரியவில்லை

349. “இரட்டைக் கிளவி போல் இணைந்தே வாழுங்கள் பிரிந்தால் பொருளில்லை” என்றவர் யார்?
a. முடியரசன் b. சுரதா c. வாணிதாசன்
d. கண்ணதாசன் e. விடை தெரியவில்லை

350. “போலச் செய்தல்” பண்பை அடிப்படையாக கொண்ட கலை
a. சிற்பக் கலை b. பேச்சுக் கலை c. நாடகக் கலை
d. ஓவியக் கலை e. விடை தெரியவில்லை

351. சூரிய ஒளி பெறாத செடியும், பகுத்தறிவு ஒளிபெறாத சமுதாயமும் வளர்ச்சி அடையாது’ என உணர்ந்தவர்
a. பாரதி b. சுரதா c. பாரதிதாசன் d. கவிமணி
e. விடை தெரியவில்லை

352. அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம் அமைந்துள்ள இடம்
a. சென்னை b. மதுரை c. சிதம்பரம் d. தஞ்சை
e. விடை தெரியவில்லை

353. ‘திராவிட’ எனும் சொல்லே தமிழ் எனும் சொல்லிலிருந்து உருவானதாகும் என்று கூறியவர்
a. ஈராஸ் பாதிரியார் b. கால்டுவெல்
c. ஜி.யு. போப் d. வீரமாமுனிவர்
e. விடை தெரியவில்லை

354. நிலத்திலும் அடர் உப்புத்தன்மை நீரிலும் வாழும் பறவை
a. பூநாரை b. அன்னம் c. கொக்கு d. குருகு
e. விடை தெரியவில்லை

355. ‘நாடகச்சாலையொத்த நற்கலாசாலையொன்று நீடுலகில் உண்டோ நிகழ்த்து’ யார் கூற்று?
a. பம்மல் சம்பந்தனார் b. சங்கரதாசு சுவாமிகள்
c. கவிமணி d. பரிதிமாற் கலைஞர்
e. விடை தெரியவில்லை

356. பாவேந்தர் பாரதிதாசன் பாடியது
a. “பழமையிருந்த நிலை கிளியே பாமரர் ஏதறிவர்”
b. “தேனொக்கும் செந்தமிழே! நீ கனி! நான் கிளி”
c. “சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்”
d. “தோள்கள் உனது தொழிற்சாலை நீ தொடுமிடமெல்லாம் மலர்ச்சோலை”
e. விடை தெரியவில்லை

357. தமிழகத்தின் மிகப் பழமையான குடைவரைக் கோயில் எங்குள்ளது?
a. பிள்ளையார்பட்டி b. பெருமாள் பட்டி
c. சுங்குவார்ப் பட்டி d. செல்லப்பிராட்டி
e. விடை தெரியவில்லை

358. நல்ல பாம்பின் நஞ்சு மூலம் தயாரிக்கப்படும் வலி நீக்கி மருந்து எது?
a. ஆஸ்பிரின் b. கோப்ராக்சின்
c. குளோரோபார்ம் d. தைராக்ஸின்
e. விடை தெரியவில்லை

359. தமிழக அரசின் பரிசு பெற்ற முடியரசனின் காவியம் எது?
a. சகலகலா வல்லி மாலை b. பூங்கொடி
c. மணிக்கொடி d. உரிமை வேட்கை
e. விடை தெரியவில்லை

360. தமிழ் –பிரெஞ்சுகையகர முதலிஎனும் நூலை வெளியிட்ட கவிஞர்
a. கண்ணதாசன் b. வாணிதாசன்
c. வண்ணதாசன் d. பாரதியார்
e. விடை தெரியவில்லை

361. ‘களி இன்ப நல்வாழ்வு கொண்டு – கன்னித் தமிழுக்கு ஆற்றுக தொண்டு” – என்று பாடியவர்
a. பாரதியார் b. கோ.அ.அப்துல் லத்தீப்
c. முடியரசன் d. பாரதிதாசன்
e. விடை தெரியவில்லை

362. ‘காந்தியடிகளை அரை நிருவாணப் பக்கிரி’ என்று ஏளனம் செய்தவர்.
a. சர்ச்சில் b. புனித ஜார்ஜ்
c. வாரன் ஹேஸ்டிங்ஸ் d. இராபர்ட் கிளைவ்
e. விடை தெரியவில்லை

363. “நோய்க்கு மருந்து இலக்கியம்” என்று கூறியவர்?
a. உ.வே.சாமிநாதர்
b. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்
c. மறைமலையடிகள்
d. கவிமணி தேசிக விநாயகம்
e. விடை தெரியவில்லை

364. முதன் முதலாக மக்களுக்காக (பொது) நூல் நிலையங்கள் அமைக்கப்பட்ட இடம்
a. கிரீஸ் b. ரோம் c. இத்தாலி d. ஏதென்ஸ்
e. விடை தெரியவில்லை

365. மேரி கியூரி –பியூரிகியூரி இணையர் இணைந்து நோபல் பரிசு பெற்ற ஆண்டு எது?
a. 1911 b. 1934 c. 1903 d. 1905
e. விடை தெரியவில்லை

366. தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர் யார்?
a. கவிஞர் முத்துலிங்கம்
b. கவியரசர் கண்ண தாசன்
c. கவிஞர் வெ. இராமலிங்கனார்
d. கவிஞர் பாரதிதாசன்
e. விடை தெரியவில்லை

367. ‘வங்க சிங்கம்’ என அழைக்கப்படுபவர்
a. காந்தியடிகள் b. ஜவஹர்லால் நேரு
c. வல்லபாய் பட்டேல்
d. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்
e. விடை தெரியவில்லை

368. தவறான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.
a. 1949–ல் குமாரசாமி முதலமைச்சராக இருந்தார்
b. 1954–ல் காமராசர் முதலமைச்சராக இருந்தார்
c. 1944–ல் பிரகாசம் முதலமைச்சராக இருந்தார்
d. 1947–ல் ஓமந்தூர் இராமசாமி முதலமைச்சராக இருந்தார்
e. விடை தெரியவில்லை

369. தம்முடைய மாணவர்களை ‘இயற்றமிழ் மாணவர்’ என அழைத்தவர்
a. உ.வே. சாமிநாதர் b. பரிதிமாற்கலைஞர்
c. மீனாட்சி சுந்தரனார் d. இராகவனார்
e. விடை தெரியவில்லை

370. நான்காம் தமிழ்ச் சங்கத்தை தோற்றுவித்தவர்
a. பாண்டித்துரையார் b. மருது பாண்டியர்
c. முத்துராமலிங்கனார் d. திருமலை நாயக்கர்
e. விடை தெரியவில்லை

371. பொருத்துக :
A. எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் — 1. கண்ணதாசன்
B. பாட்டாளி மக்களது பசி தீர வேண்டும் — 2. கவிமணி
C. எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் — 3. நாமக்கல் கவிஞர்
D. சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும் — 4. பாரதிதாசன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 3 | 1 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 2 | 1 | 4 | 2 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

372. “நீ மீண்டும் தோன்றிய பாரதியடா” என்று கல்யாண சுந்தரத்தை பாராட்டியவர்
a. மருதகாசி b. சுரதா
c. உடுமலை நாராயண கவி d. தோழர் ஜீவானந்தம்
e. விடை தெரியவில்லை

373. கீழ்வருவனவற்றுள் கவிஞர் கண்ணதாசன் இயற்றாத நூல் எது?
a. ஆயிரந்தீவு அங்கயற்கண்ணி
b. இராஜ தண்டனை
c. மாங்கனி
d. கொய்யாக்கனி
e. விடை தெரியவில்லை

374. ஏழையின் குடிசையில் அடுப்பும் விளக்கும் தவிர எல்லாமே எரிகின்றன – எனப் புதுக்கவிதை எழுதியவர்
a. கங்கை கொண்டான் b. அக்கினிப்புத்திரன்
c. வல்லிக்கண்ணன் d. தமிழ்நாடன்
e. விடை தெரியவில்லை

375. பொருத்துக:
A. டால்ஸ்டாய் — 1. விசுவ பாரதியில் பணி புரிந்த பேராசிரியர்
B. பெட்ரண்ட் ரஸ்ஸல் — 2. கிரேக்க சிந்தனையாளர்
C. கிருபாளினி — 3. இரஷ்ய நாட்டு எழுத்தாளர்
D. பிளேட்டோ — 4. சிந்தனையாளர் கல்வியாளர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 4 | 2 | 3 | 1 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

376. பின்வரும் புதினங்களில் ராஜம் கிருஷ்ணன் எழுதாத புதினம் எது?
a. வேருக்கு நீர் b. கரிப்பு மணிகள்
c. கூட்டுக்குஞ்சுகள் d. பெண்மனம்
e. விடை தெரியவில்லை

377. காமராசரின் அரசியல் குரு
a. காந்தியடிகள் b. பேரறிஞர் அண்ணா
c. நேரு d. சத்திய மூர்த்தி
e. விடை தெரியவில்லை

378. “உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்” என்று கூறியவர்
a. கம்பர் b. திருவள்ளுவர்
c. இளங்கோவடிகள் d. வள்ளலார்
e. விடை தெரியவில்லை

379. “ஒரு நாடு வளமுடன் இருக்க வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும்” – எனக் கூறியவர் யார்?
a. பாரதியார் b. அம்பேத்கார்
c. பெரியார் d. அறிஞர் அண்ணா
e. விடை தெரியவில்லை

380. “ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தை கைக்கொண்டு வாழவிடுவதே தருமம்” – எனக் கூறியவர்
a. இராணி மங்கம்மாள் b. அஞ்சலையம்மாள்
c. வள்ளியம்மை d. வேலுநாச்சியார்
e. விடை தெரியவில்லை

381. உன் மானத்தை விட நாட்டின் மானம் பெரியது என்று உணர். உன் உயர்வை விட, நாட்டின் உயர்வு இன்றியமையாதது என்று உணர், உன் நலத்தை விட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர், நெருக்கடி நேரும் போது உன் நலம், உயர்வு, மானம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுக்கொடு – இக்கூற்று யாருடைய கடிதப் பகுதி?
a. பேரறிஞர் அண்ணா b. அன்னை இந்திராகாந்தி
c. மு. வரதராசனார் d. திரு.வி.க
e. விடை தெரியவில்லை

382. “நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை”
எனக் கவிதை பாடியவர்
a. சுரதா b. கண்ணதாசன் c. பாரதிதாசன்
d. மு. மேத்தா e. விடை தெரியவில்லை

383. ‘மக்கள் கவிஞர்’ என தமிழக மக்களால் அழைக்கப்படுபவர்
a. ந. பிச்சமூர்த்தி b. உடுமலை நாராயணகவி
c. சுரதா d. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
e. விடை தெரியவில்லை

384. பொருத்துக :
A. எட்வர்டு மை பிரிட்சு — 1. ஒருவர் மட்டும் பார்க்கும் படக் கருவி
B. எடிசன் — 2. இயக்கப்படம்
C. ஈஸ்ட்மன் — 3. ஓடும் குதிரையை வைத்து இயக்குப் படம்
D. பிரான்சிஸ் சென்கின்சு — 4. படசுருள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 4 | 2 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

385. “தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளர வேண்டும்” – என இளைஞர்களுக்கு உரைத்தவர் யார்?
a. தமிழ்த் தென்றல் திரு.வி.க b. பெரியார்
c. பாவேந்தர் பாரதிதாசன் d. தாரா பாரதி
e. விடை தெரியவில்லை

### விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 346 c | 347 a | 348 d | 349 b | 350 c |
| 351 c | 352 a | 353 a | 354 a | 355 c |
| 356 b | 357 a | 358 b | 359 b | 360 b |
| 361 b | 362 a | 363 b | 364 a | 365 c |
| 366 c | 367 d | 368 c | 369 b | 370 a |
| 371 b | 372 d | 373 d | 374 c | 375 b |
| 376 d | 377 d | 378 d | 379 c | 380 a |
| 381 c | 382 b | 383 d | 384 b | 385 b |

நாளை பொதுத்தமிழ் – தமிழ் அறிஞர்களும் தமிழ்த் தொண்டும் பாட பிரிவில் இருந்து கேள்வி–பதில்கள் இடம்பெறும்.